


23. 07. 2025

தலைப்பு செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரிட்டன் மற்றும் மாலத்தீவிற்கு 4 நாள் அரசுமுறை பயணமாக இன்று புறப்பட்டு சென்றார்.
- நாட்டின் அடுத்த குடியரசு துணைத்தலைவர் தேர்வுக்கான நடைமுறைகளை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.
- நாடாளுமன்ற இரு அவைகளும் எதிர்கட்சிகளின் தொடர் அமளியால் பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளன
- தமிழக அரசின் நலத்திட்ட சிறப்பு முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது விரைந்து தீர்வுகாண முதலமைச்சர் திரு.மு.க ஸ்டாலின் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.
- இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர் பயணம்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 4 நாள் அரசுமுறை பயணமாக பிரிட்டன் மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கு இன்று புறப்பட்டார்.

இன்றுமாலை லண்டன் சென்றடையும் பிரதமர், தமது பயணத்தின் முதல்கட்டமாக பிரிட்டன் பிரதமர் Keir Starmer உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்த பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து இந்தியா - பிரிட்டன் நாடுகளுக்கிடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என தெரிகிறது.

மன்னர் 3-ம் சார்ல்ஸையும் பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

தமது பயணத்தின் 2-வது கட்டமாக வரும் 25-ம் தேதி மாலத்தீவு செல்லும் பிரதமர், அந்நாட்டின் 60-வது சுதந்திர தினவிழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

இப்பயணத்தின் போது பிரதமர் இருநாடுகளின் வர்த்தக தலைவர்களையும் சந்தித்து பேசவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

பிரதமர் – அரியலூர்

இதனிடையே பிரதமர் 2 நாள் பயணமாக வரும் 27-ம் தேதி தமிழகம் வருகிறார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழனின் கங்கை வெற்றியின் ஆயிரமாவது ஆண்டுவிழாவில் பிரதமர் அன்றைய தினம் கலந்துகொள்கிறார்.

இந்த நிகழ்வை குறிக்கும் சிறப்பு நாணயத்தை பிரதமர் வெளியிடுகிறார்.

மன்னர் ராஜேந்திரசோழனின் கங்கை கடார பயணம், சைவ சித்தாந்தம், சோழசகாப்தம் குறித்த புகைப்பட மற்றும் சிற்ப கண்காட்சிக்கு தொல்லியல் துறை ஏற்பாடு செய்துள்ளது.

பிரதமர் வரும் 28-ம் தேதி தூத்துக்குடியில் 381 கோடி ரூபாய் மதிப்பிலான மேம்படுத்தப்பட்ட விமான நிலைய அதிநவீன விரிவாக்கப் பணிகளையும் தொடங்கி வைக்கிறார்

தூத்துக்குடி விமான நிலையத்தின் ஓடுதளம் ஆயிரத்து 350 மீட்டரிலிருந்து 3 ஆயிரம் மீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ஒரே நேரத்தில் 5 விமானங்களை நிறுத்த வகை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

குடியரசு துணைத்தலைவர்

குடியரசு துணைத்தலைவர் பதவியிலிருந்து திரு. ஜக்தீப்தன்கர் ராஜினாமா செய்ததையடுத்து புதிய குடியரசு துணைத்தலைவர் பதவி தேர்வுக்கான நடைமுறைகளை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

அரசியல் சாசனத்தின் 324-வது பிரிவின் கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பூர்வாங்க நடைமுறைகள் நிறைவடைந்த பின்னர் இதற்கான தேர்தல் அட்டவணையை தேர்தல் ஆணையம் வெளியிடும்.

மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள் மற்றும் நியமன உறுப்பினர்களை உள்ளடக்கிய வாக்காளர் அட்டவணை தயாரிக்கும் பணிகள் தற்போது முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகின்றன.

குடியரசு தலைவர் மற்றும் துணை குடியரசு தலைவர் தேர்தல் சட்டம் 1952 மற்றும் 1974 சட்ட விதிமுறைகளின் படி குடியரசு துணைத்தலைவர் தேர்தல்களுக்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு.ஓம்பிர்லா கேள்வி நேரத்தை நடத்த முற்பட்டபோது பீஹார் சிறப்பு வாக்காளர் பட்டியல் குறித்து விவாதிக்க வேண்டுமென்று எதிர்கட்சிகள் முழக்கமிட்ட நிலையில், கேள்வி நேரத்தை அனுமதிக்க அவைத்தலைவர் திரு.ஓம்பிர்லா எதிர்கட்சிகளை கேட்டுக்கொண்டார்.

இந்த கூச்சல் குழப்பத்திற்கிடையே பீஹார் ரயில்வே திட்டங்கள் குறித்த கேள்விக்கு மத்திய அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் பதிலளித்தார்.

தொடர்ந்து அமளி நிலவவே அவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது தேசிய விளையாட்டு மசோதா 2025, தேசிய போதை மருந்து சட்டத்திருத்த மசோதாக்களை விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா அவையில் தாக்கல் செய்தார்.

பூஜ்ஜிய நேரத்தை தொடர அவை நடத்தும் அலுவலரின் முயற்சிக்கு யாரும் செவிசாய்க்காமல் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் மக்களை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே நிலைமை காணப்பட்டதால் அவை துணைத்தலைவர் பிற்பகல் வரை அவையை ஒத்திவைத்தார்.

❖❖❖❖❖❖❖

தேசிய ஒலிபரப்புதினம்

தேசிய ஒலிபரப்புதினம் இன்று கொண்டாடப்படுகிறது

நம் தேசத்தின் ஒலிபரப்பு சேவை மூலம் கல்வி, கலாச்சார பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் முன்னெடுத்துச் செல்லப்பட்டு இச்சேவை உயர்நிலையை எட்டியிருப்பதை போற்றும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

1927-ம் ஆண்டு ஜுலை 23-ம் தேதியில் பம்பாயிலிருந்து வானொலி ஒலிபரப்பு சேவை முதல்முறையாக தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1936-ம் ஆண்டு இந்திய ஒலிபரப்பு சேவை ஆல் இண்டிய ரேடியோ என்று பெயர் மாற்றம் கண்டு தற்போது ஆகாஷவாணி என்றுஅழைலகக்கப்படுகிறது.

பிரசார் பாரதியின் முதன்மை நிர்வாக இயக்குநர் திரு. கவுரவ் துவேதி வெளியிட்டுள்ள செய்தியில் 90 ஆண்டுகால தேசிய கலாச்சாரத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்லும் ஆகாஷவாணி தொடர்ந்து நேயர்களை மகிழ்வித்து வருவதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் நேரில் கொண்டுசெல்லும் சிறப்பு முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது விரைந்து தீர்வுகாண முதலமைச்சர் திரு.மு.க ஸ்டாலின் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

சென்னையில் மருத்துவமனையிலிருந்து காணொலி மூலம் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் இன்று கலந்துரையாடிய அவர், முகாம்களுக்கு மனுக்களை அளிக்கவரும் மக்களுக்கு தேவையான வசதிகள் செய்துதரப்பட வேண்மென்றும் கூறினார்.

மருத்துவர்கள் அறிவுறுத்திய ஓய்வுக்கு பின்னர் மக்களை சந்திக்க தாம் விரைவில் மாவட்டங்களுக்கு வர இருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

மா சுப்ரமணியன்

தமிழக அரசின் திட்டங்கள் மக்களை நேரடியாக சென்றடையும் சிறப்பு முகாம் மாநிலத்தில் வரவேற்பை பெற்றுள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை மதுரவாயிலில் இத்திட்ட முகாமை இன்று ஆய்வுசெய்து பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

பள்ளி பொதுத்தேர்வு கால அட்டவணைகள் இன்னும் ஒருவார காலத்தில் வெளியிடப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ்பொய்யாமொழி தெரிவித்துள்ளார்

திருச்சி அரியமங்கலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் முகாம் அனைத்து இடங்களிலும் வரவேற்பை பெற்றுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

கீதா ஜீவன்

தமிழக அரசுக்கு களங்கம் ஏற்படும் வகையில் அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு தரமற்ற முட்டைகள் வழங்கப்பட்டால் சம்மந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் எச்சரித்துள்ளார்

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சி அங்கன்வாடி மையத்தில் குழந்தைக்கு கெட்டுப்போன முட்டை வழங்கியது தொடர்பான விவகாரத்தில் ஊழியர் உடனடியாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் வரும் கல்வியாண்டில் இடஒதுக்கீட்டு அடிப்படையில் காலியிடங்கள் நிரப்பப்படவுள்ளதால் தகுதியுடையோர் வரும் 30-ம் தேதிவரை இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் உபகரணங்களை மானியத்தில் வாங்க விரும்பும் விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் வரும் 31-ம் தேதிக்குள் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.அருண்ராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களுக்காக வங்கிகள் மூலமாக 23 ஆயிரத்து 268 கோடி ரூபாய் கடன்வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரத்தில் மாபெரும் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

சேலம் அஸ்தம்பட்டியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாநகராட்சி மேயர் திரு.ராமச்சந்திரன் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். 200-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவியர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖

மீனம்பாக்கம்

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தின் இரண்டாவது கட்ட முனைய விரிவாக்கப் பணிகள் நிறைவடைந்து அடுத்த ஆண்டு மார்ச் மாதம் செயல்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது

இதுகுறித்து எமது செங்கல்பட்டு செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

சுப்ரமணிய சிவா

சுதந்திர போராட்ட வீரர் சுப்ரமணிய சிவாவின் 100-வது நினைவுதினத்தை ஒட்டி பாப்பாரபட்டியிலுள்ள அன்னாரது நினைவிடத்தில் உள்ள திருவுருவப்படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் இன்று மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

5-வது இறுதிப்போட்டி லண்டனில் வரும் 31-ம் தேதி தொடங்கும்.

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

சீன சேங்சூவில் நடைபெறும் ஓப்பன் சூப்பர் பேட்மிட்டன் காலிறுதிக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இவர், ஜப்பான் வீராங்கனையை 21-15, 8-21, 21-17 என்ற செட்களில் அவர் தோற்கடித்தார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி இணை - ஜப்பான் இணையை தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖